5 மில்லியன் ரிங்கிட்
**கல்வி உதவித் திட்டம்:**

மலேசிய மலையாளிகள் சங்க அறக்கட்டளையின் முயற்சியில்

# 57 மாணவர்களுக்கு புதிய வாய்ப்பு

ராமேஸ்வரி ராஜா

கோலாலம்பூர், ஏப். 26-
நிதியளவில் பின்தங்கிய மாணவர்களுக்காக AMMA எனப்படும் அனைத்து மலேசிய மலையாளிகள் சங்க அறக்கட்டளை, நாடளாவிய அளவில் 10 உயர்கல்வி நிறுவனங்களுடன் இணைந்து, 5 மில்லியன் ரிங்கிட் மதிப்புள்ள கல்வி உதவி, மாணவர் நலன்களுக்கான திட்டத்தை அறிவித்தது. HOPE Harnessing Opportunities for Pathways in Education எனப்படும் இந்த புதிய முயற்சியில் 57 மலேசிய மாணவர்களுக்கு இந்த வாய்ப்பு வழங்கப்படவுள்ளது.

ஆசிய பசிபிக் தொழில்நுட்ப பல்கலைக்கழகம், பிரிக்ஃபீல்ட்ஸ் ஆசியா கல்லூரி (BAC), HELP பல்கலைக்கழகம், IACT கல்லூரி, MAHSA பல்கலைக்கழகம், ரிலையன்ஸ் கல்லூரி, சன்வே பல்கலைக்கழகம், சன்வே கல்லூரி, மலேசியா கணினி அறிவியல் பொறியியல் பல்கலைக்கழகம் (UNIMY), வெரித்தஸ் பல்கலைக்கழக கல்லூரி (Veritas University College) ஆகியவை அம்மா அறக்கட்டளையின் முன்முயற்சியில் பங்கேற்கும் கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் ஆகும் என டாமன்சாரா மஹாஸ் ஹைட்ஸ் லாட்ஜில் நடைபெற்ற அதன் உதவித்தொகையை வழங்கும் நிகழ்ச்சிக்கு தலைமையேற்றுப் பேசிய அம்மா அறக்கட்டளை தலைவர் டத்தோ சுரேந்திரன் மேனன் தெரிவித்தார்.

எஸ்.பி.எம். அல்லது ஓ லெவல் (O level) அல்லது அதற்கு சமமான படிப்பை முடித்த மலேசிய மாணவர்கள், எஸ்.டி.பி.எம், ஃபவுண்டேஷன் (Foundation) அல்லது பல்கலைக்கழக முன் படிப்புகளை (Pre - Univesity) முடித்தவர்கள் மருத்துவம், பல் மருத்துவம், மருந்தகம், பொறியியல், கணினி அறிவியல், சைபர் பாதுகாப்பு, ரோபாட்டிக்ஸ், ஆட்டோமேஷன், உளவியல், சட்டம், வணிகம், நிதி, ஊடகம், தகவல் தொடர்பு, குழந்தைப் பருவம், ஹோட்டல் மேலாண்மை, சமையல் கலைகள் போன்ற துறைகளில் Foundation, டிப்ளோமா அல்லது இளங்கலைப் பட்டப்படிப்புகளுக்கு விண்ணப்பிக்கலாம்.




பிரசி ராஜசிங்கத்திடமிருந்து நிதி பெற்றுக்கொண்ட சுரேந்திரன்

தேர்ந்தெடுக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், தகுதியான மாணவர்களுக்கு 50 விழுக்காடு முதல் 100 விழுக்காடு வரை கல்விக் கட்டணத் தள்ளுபடி வழங்குகின்றன. மீதமுள்ள தொகைக்கு, அம்மா அறக்கட்டளை வட்டி இல்லா கல்விக் கடன்கள், நிதி உதவிகளை வழங்க உள்ளது என அவர் தெரிவித்தார்.

25 வயதிற்குட்பட்ட மலேசியப் பிரஜைகள், குடும்ப வருமானம் பி40, எம்40 பின்னணியைக் கொண்டவர்கள், கல்வித் திறன், சமூகப் பங்களிப்பு, தலைமைத் திறமை ஆகியவற்றுடன் உயர்கல்விக்கான உறுதி கொண்டவர்கள் விண்ணப்பத்திற்கு தகுதி பெறுகிறார்கள்.

மலேசியாவில் தரமான உயர்கல்விக்கான செலவுகள் தொடர்ந்து உயர்வதால், பல மாணவர்கள் அதை அடைய முடியாமல் உள்ளனர். இந்த HOPE முயற்சி, அவர்களுக்கு புதிய வாழ்க்கை வாயிலாக அமையும் என்றார் அவர்.

1975ஆம் ஆண்டு, மலையாளி சமூகத்தின் உயர்வுக்காக உருவாக்கப்பட்ட இந்த அறக்கட்டளை, கடந்த 45 ஆண்டுகளில் 1,627 மாணவர்களுக்கு 6.9 மில்லியன் ரிங்கிட் வழங்கியுள்ளது என மேலும் குறிப்பிட்ட சுரேந்திரன் மேனன், இந்த விழாவில் நன்கொடையாளர்களிடமிருந்து 500,000 ரிங்கிட் வரை நிதி பெறப்பட்டதாகவும் தெரிவித்தார்.

உதவிக்கரமாக இருக்க விரும்பும் நபர்கள், உறுப்பினர் சேர்ப்பு, நன்கொடை அல்லது "Adopt -a-Scholar" திட்டத்தின் மூலம் மாணவர்களுக்கு ஆதரவளிக்க விரும்புகிறவர்கள் 603-7887 7666 என்ற தொலைபேசி எண், மின்னஞ்சல்: engageammafoundation.com.my அல்லது இணையதளம்: www.ammafoundation.com.my வாயிலாக தொடர்புகொள்ளலாம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

OPPO Reno8 T 5G

மவுண்ட் ஆஸ்ட்டின் பொழுதுபோக்கு மையத்தில்

சுல்தான் அப்துல் அஸிஸ்